# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் : 16 3 1 6

## தமிழ்

நேரம் : 1.30 மணி

பகுதி - 1

மதிப்பெண்கள் : 50

I. பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க) 8 x 1 = 8

1. மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்? மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ________.
   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
2. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ________.
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
3. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ________.
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
4. மேன்மை தரும் அறம் என்பது
   அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
   ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது
5. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
6. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.
   அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
   இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
7. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
   அ) உதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
   இ) பேகன் ; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி
8. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர்
   அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
   இ) இகழ்ந்தால் இறந்து விடாது என் மனம் ஈ) என் மனம் இறந்து விடாது இகழ்ந்தால்

பகுதி - 2

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி. 5 x 2 = 10

9. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.
10. பாசவர், வாசவர் பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
11. "கொள்வோர் கொள்க ; குரைப்போர் குரைக்க!
    உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது"
    அ) அடியெதுகையை எடுத்தெழுதுக. ஆ) இலக்கணக்குறிப்பு எழுதுக : கொள்க, குரைக்க
12. குறிப்பு வரைக : அவையம்
13. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.
14. கலைச்சொல் எழுதுக : அ) Document ஆ) Belief
15. மரபுத் தொடரை தொடரில் அமைத்து எழுதுக :
    அ) கண்ணும் கருத்துமாக ஆ) ஆறப்போடுதல்

Kindly send me your answer keys to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பகுதி - 3

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 3 x 3 = 9

16. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

17. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

18. "பகர்வனர் திரிதிரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்திநூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"
அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?
ஆ) பாடலில் அமைந்த எதுகை, மோனையை எடுத்து எழுதுக.
இ) இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?

19. "மாற்றம் எனது மானிடத் தத்துவம்" எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடலை அடி மாறாமல் எழுதுக.

பகுதி - 4

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 3 x 5 = 15

20. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

21. ***தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி தமிழ் எண்ணுரு தருக.***

முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவு போல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப் பெருமை சாற்றுகிறது.

22. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக :**



***(அல்லது)***

***அலகிடுதல் செய்க :***

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

பகுதி - 5

**V. விரிவான விடையளிக்க.** 1 x 8 = 8

23. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

***(அல்லது)***

ஆ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும் ......... குறித்து எழுதுக.

***/***

Kindly send me your answer keys to padasalai.net@gmail.com

www.Padasalai.Net